**அனுப்புநர்**
மரு.சு.முகம்மது அப்சல் அலி, MBBS.,
துணை இயக்குநர் மருத்துவப் பணிகள்(தொழுநோய்),
அரசு பெண்ட்லண்டு மருத்துவமனை வளாகம்,
G.P.H. ரோடு, வேலூர்- 632 001.
தொலை பேசி: 0416-2217427
EMAIL.ID: **ddlvellore@gmail.com**

**பெறுநர்**
முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர்.

**ந.க.எண்:12/ந.க./2018 நாள்: 22.01.2018**

ஐயா ,

**பொருள்:** தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம் - வேலூர் மாவட்டம் - ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் - 30.01.2018 அன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting)- நடத்தக்கோருதல் - சார்பாக.

**பார்வை:** 1. இந்திய அரசின் உதவி இயக்குநர் (தொழுநோய் பிரிவு) அவர்களின் 15.12.2017 நாளிட்ட கடிதம், கடித எண் T11015/13/2017.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை இயக்குநர், சென்னை அவர்களின் 19.12.2017 மற்றும் 05.01.2018 நாளிட்ட கடிதம், கடித எண் 49/SLAC/SHS/2018.

***

ஒவ்வொரு ஆண்டும் நமது தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவு தினமான சனவரி 30 ஆம் நாளன்று உலகம் முழுவதும் **'உலக தொழுநோய் ஒழிப்பு தினமாக'** அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் சனவரி 30 முதல் பிப்ரவரி 13 வரை இரு வாரங்களுக்கு தொழுநோய் ஒழிப்பு இரு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

பார்வையில் கண்ட கடிதங்களின்படி இந்த ஆண்டு சனவரி 30 ஆம் நாளன்று அனைத்து பள்ளிகளில் சிறப்பு இறை வணக்க கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு 18.01.2018 அன்று நமது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட அலுவலர்களுக்கான ஸ்பர்ஷ் (Sparsh) தொழுநோய் ஒழிப்பு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் 30.01.2018 ஆம் நாளன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting) கூட்டுவது என்றும் அதில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் நடத்துவது என்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் முடிவெடுக்கப்பட்டது.

1. மாவட்ட ஆட்சியரின் கடிதம் வாசித்தல்
2. ஸ்பர்ஷ் உறுதி மொழி எடுப்பது.
3. தொழுநோய் பற்றிய விஞ்ஞான (Science) கருத்துக்களை வாசிப்பது.

**இதன் சார்பாக அனைத்து பள்ளிகளிலும் வரும் 30.01.2018 அன்று சிறப்பு இறை வணக்க கூட்டம் (Prayer Meeting) நடத்த கனிவுடன் வேண்டுகிறேன்.** மேலும் இக்கூட்டத்திற்கு அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் (Medical Officer), வட்டார சுகாதார மேற்பார்வையாளர் (BHS), மருத்துவமல்லா மேற்பார்வையாளர் (NMS), சுகாதார ஆய்வாளர் (HI), பகுதி சுகாதார செவிலியர் (SHN), மற்றும் கிராம சுகாதார செவிலியர் (VHN), ஆகியோர்களை கலந்து கொள்ள எங்கள் அலுவலகத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**இந் நிகழ்ச்சியை பற்றிய அறிக்கையை அந்தந்த பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலரிடம் சேர்க்குமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உத்திரவிடுமாறு வேண்டுகிறேன்.**

தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி !

22/1/18
DEPUTY DIRECTOR
OF MEDICAL SERVICES (LEPROSY)
VELLORE.

**இணைப்பு:**
1. மாவட்ட ஆட்சியரின் உறுதி மொழி
2. ஸ்பர்ஷ் உறுதி மொழி
3. தொழுநோய் பற்றிய வினா விடைகள்
4. ஸ்வப்னா சின்னம்

# 1. மாவட்ட ஆட்சித்தலைவரின் உறுதி மொழி

## ஸ்பர்ஷ் (SPARSH) தொழுநோய் ஒழிப்பு பிரச்சாரம், சனவரி-2018.

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே!

வேலூர் மாவட்ட மக்களாகிய நாமும், மாவட்ட தொழுநோய் ஒழிப்பு நிர்வாகமும் இதன்மூலம் உறுதி கூறுவது என்னவெனில், நமது மாவட்டத்தை தொழுநோயில்லாத மாவட்டமாக உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். நமது தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்களின் நினைவு தினமான சனவரி 30, 2018 அன்று அவரது கனவான தொழுநோய் இல்லாத சமுதாயத்தை உருவாக்க உறுதி ஏற்போம். அனைத்து தொழுநோயாளிகளையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். இந்த இலக்கினை அடைய நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை உதவிகளையும் பயன்படுத்துவோம். அதே நேரத்தில் நாம் தொழுநோயாளிகளை ஒதுக்கமாட்டோம் என்றும், மற்றவர்களும் தொழுநோயாளிகளை ஒதுக்க அனுமதிக்கமாட்டோம் என்றும் உறுதி கூறுவோம். நாம் தனியாகவும் கூட்டாகவும் தொழுநோய் பற்றிய களங்கம் (STIGMA) ஒழியவும், தொழுநோயாளிகளை ஒதுக்குவதை (DISCRIMINATION) எதிர்த்தும் பாடுபடுவோம். சமுதாயத்தில் தொழுநோயாளிகளும் பொதுமக்களுடன் சேர்ந்து வாழ்வதை உறுதி செய்வோம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்

# 2. ஸ்பர்ஷ் உறுதி மொழி

மகாத்மா காந்தி நினைவு தினமான இன்று, உணர்ச்சியற்ற தேமல் அல்லது படை போன்றோ, தொழுநோயினால் உடல் குறைபாடு உள்ளவர்களை எனது குடும்பத்திலோ அல்லது வீட்டின் அருகில் உள்ளவர்களோ, சமூகத்திலோ இருந்தால் உடன் அவர்களை அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு மருத்துவமைக்கு அழைத்து சென்று சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்வேன் என்று உறுதி மொழி ஏற்கிறேன்.

அவர்களை அன்பாகவும், எனது குடும்ப உறுப்பினர்கள் போலவும் வேறுபாடு இல்லாமல் உரிய மரியாதையுடன் நடத்துவேன்.

தொழுநோய் குணமாகக்கூடியது, ஆரம்ப நிலை சிகிச்சை உடல் குறைபாட்டை ஏற்படுத்தாது, அங்கஹீனத்தை தடுக்கம். தொழுநோயாளிளை ஒதுக்கக் கூடாது போன்ற விபரங்களை ஊர் முழுவதும் தெரிவித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவேன்.

மகாத்மாவின் கனவை நனவாக்கும் வகையில் தொழுநோய் இல்லா இந்தியா உருவாக அனைவருடனும் இணைந்து ஒத்துழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

# 3. தொழுநோய் பற்றிய வினா விடைகள்

**1. தொழுநோய் வருவதற்கும் , நோய் எதிர்ப்பு சக்திக்கும் உள்ள தொடர்பு என்ன ?**

நோய் எதிர்ப்பு சக்தி நன்றாக இருந்தால் தொழுநோய் வராது. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தாலோ அல்லது நோய் எதிர்ப்பு சக்தியே இல்லாமல் இருந்தாலோ தொழுநோய் வர வாய்ப்பு உள்ளது.

**2. தொழுநோயை குணப்படுத்தும் கூட்டு மருந்து சிகிச்சை எங்கே கிடைக்கிறது ?**

தொழுநோயை குணப்படுத்தும் கூட்டு மருந்து சிகிச்சை அனைத்து

1.அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 2. அரசு மருத்துவ மனைகள்
3. நகராட்சி சுகாதார மையங்கள் மற்றும் 4. அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள்
ஆகிய இடங்களில் இலவசமாக கிடைக்கிறது.

**3. தொழுநோயை உண்டாக்கும் கிருமியின் பெயர் என்ன ?**

தொழுநோயை உண்டாக்கும் கிருமியின் பெயர் மைக்ரோ பேக்டீரியம் லெப்ரே / தொழுநோய் பேக்டீரியா எனும் பேக்டீரியா ஆகும்.

**4. உணர்ச்சியற்ற தேமல் உள்ள ஒருவரை பார்க்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள். ?**

உணர்ச்சியற்ற தேமல் உள்ள ஒருவரை காண நேரிட்டால் அவருக்கு தக்க ஆலோசனை கூறி அரசு மருத்துவமனை / ஆரம்ப சுகாதார நிலையம் / நகராட்சி சுகாதார மையம் செல்லுமாறு அறிவுறுத்துவேன்.

**5. தொழுநோய் கிருமியை கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன .? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர். ?**

ஹார்மோர் ஹான்சன். அவர் நார்வே நாட்டைச் சேர்ந்தவர்.

**6. என்.எல்.இ.பி (N.L.E.P.) யின் விரிவாக்கம் என்ன ?**

நேஷ்னல் லெப்ரசி எராடிகேஷன் புரோகிராம்/ National Leprosy Eradication Programme/தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

**7. தொழுநோயாளிகளை அன்புடன் தொட்டு பணிவிடை செய்த மிக முக்கிய பிரபலங்கள் யார்.?**

அன்னை தெரேசா, மகாத்மா காந்தியடிகள், மருத்துவர் தர்மேந்திரா, டாக்டர் ஹான்சன்.

**8. தொழுநோய் ஒழிப்பில் மாணவர்கள் எவ்வாறு பங்கு பெறலாம். ?**

தொழுநோய் பற்றிய உண்மை நிலையை மக்களிடையே விளக்கிக் கூறுதல்.

தொழுநோய் பற்றிய அச்சத்தையும், தொழுநோய் பற்றிய தவறான கருத்துக்களையும் போக்குதல்.

தொழுநோயின் ஆரம்ப அறிகுறி காணும் ஒருவரை கண்டால் ஆலோசனை கூறி அவரை ஆரம்ப கால சிகிச்சைக்கு அறிவுறுத்துதல்.

தொழுநோய் ஒழிப்புத் துறையினர் நடத்தும் விழிப்புணர்வு ஊர்வலம், விழிப்புணர்வுக் கூட்டம் ஆகியவைகளில் பங்கேற்றல்.

**9. தொழுநோயின் மிக முக்கியமான ஆரம்ப அறிகுறி என்ன. ?**

சிவந்த அல்லது வெளிர்ந்த நிற உணர்ச்சியற்ற தேமல், நரப்புகள் தடித்திருத்தல், இரத்தத் தடவலில் தொழுநோய் கிருமி காணப்படுதல் ஆகியவை தொழுநோயின் மிக முக்கியமான ஆரம்ப அறிகுறிகளாகும்.

## 4. தொழுநோய் பற்றிய கவிதை




1. இனிய கனவே! தொழுநோய் இல்லா உலகே!!
2. இனிய கனவு நனவாகட்டும் !
   தொழுநோய் இல்லா உலகு உருவாகட்டும!!
3. கனவு ஒன்று மலரட்டும் !
   தொழுநோய் இன்று மறையட்டும் !!
4. தொழுநோய் என்று கவலையா!
   கனவிலும் வேண்டாம் உனக்கையா!!
5. கனவு காண்போம் ! தொழுநோய் இல்லா மனிதனை காண்போம் !!
6. தொழுநோய் என்று ஒரு நோய் உண்டு!
   என்று கனவிலும் மறக்கும் நாள் உண்டு!!